# அஸ்தாமலகம்

அவதாரிகை

1. பாலகனே! என் முன்னுள்ள நீ யார்? எவருடைய மகனாவாய்? எங்கே சென்று கொண்டிருக்கிறாய்? உன் பெயர் என்ன? எங்கிருந்து வந்திருக்கிறாய்? எனது உள்ளம் மகிழ விடையளிப்பாய் என்று சங்கரன் கூறியதும், பாலகன் வாய்திறந்து பேசலானான்.

2. நான் மனிதனுமல்ல, தேவனோ, யட்சனோ நானல்ல. பிராமண, க்ஷத்ரிய, வைசிய, சூத்திரனும் அல்ல. பிரம்மச்சாரி, கிருஹஸ்தன், வானப் பிரஸ்தன், சன்யாசியுமல்ல. சொல்லப்பட்ட இவர்களில் யாருமே நானல்ல. ஆத்மபோத வடிவமே நான்.

3. எல்லாத் தொழில்களுக்கும் சூரியன் காரணமாக சொல்லப்படுவதைப் போன்று தேகத்தில் மனம், கண் முதலானவைகள் இயங்குவதற்கு காரணமாய் இருப்பவன் எவனோ, எவன் எல்லா உபாதிகளையும்விட்டு ஆகாயம் போல் இருப்பானோ, என்றும் மாறாத சித்தமாயுள்ள சொரூபமான அந்த ஆத்மாவே நானாவேன்.

4. அக்னியியை விட்டு நீங்காத உஷ்ணத்தைப் போல எவன் ஏகனாய்ச் சலனமின்றிப் பிரகாசிப்பானோ; எவனை ஆராய்ந்து கரணங்களும், இந்திரியங்களும் தமது தொழில்களில் இயங்குமோ; அறிவாகிய நித்திய சித்தமாயுள்ள அந்த ஆத்ம சொரூபமே நான்.

5. கண்ணாடியில் பிரதிபலித்த முகமானது முகத்திற்கு வேறான பொருளல்ல. அதுபோல புத்தியில் பிரகாசிக்கும் சிதாபாசனாகிய ஜீவன் சித் சொரூபமேயாவான். எந்த ஜீவன் ஆத்மாவுக்கு அன்னியமான வஸ்துவாக ஆகமாட்டானோ, அந்த இரண்டற்ற நித்யாபரோட்சமாயுள்ள ஆத்மாவே நான்.

ஸ்ரீ

# அத்தாமலகம்

(அறுசீர்விருத்தம்)

இங்குறு நீயார் பிள்ளாய் யாருடை மைந்த னீதா
னெங்குசெல் கின்று யுன்பே ரென்னநீ யெங்கி ருந்து
மிங்குவந் தனையென் னுள்ள மின்புற விசைப்பா யென்று
சங்கர னவிலப் பாலன் சாற்றிட வாய்தி றந்தான். 1

## அத்தாமலக னுத்தரம்:-

நரனலன் சுரனி யக்க னுலை னந்த ணன்மற்
றரசனும் வணிகன் சூத்ர னல்லனற் பிரம சாரி
கிரகியும் வான ப்ரத்தன் கேடகல் சந்நி யாசி
நிரையினி லாரு மல்லே னிசபோத வடிவ னுமே. 2

சூரியன் சகத்தொ ழிற்குச் சொற்றிடு நிமித்த மென்ன
வாருளஞ் சட்சு வாதி யாட்டத்திற் கேது வாவ
னுரெலா வுபாதி யும்விட் டாகாயம் போலி ருப்ப
னேரிய னித்த சித்த வுருவனு மவ்வான் மாநான். 3

எரியது வெம்மை போல வெவனித்த போத ரூப
னொருவனுய்க் கம்ப மின்றி யொளிர்தரு மெவனைச் சார்ந்தே
யறிவிலாக் கரண மிந்தி யாதிதந் தொழின்மேற் செல்லு
மறிவுறு நித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 4

அத்தத்திற் பதிப லித்த வம்முக முகத்தின் வேறோர்
வத்துவன் றதுபோற் புத்தி வருசிதா பாச சீவன்
சித்துரு வெவன்வே றுகச் சிறிதுமோர் வத்து வாகா
னத்வய நித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 5

6. கண்ணாடி இல்லையென்றால் முகத்தின் பிரதி பிம்பமும் இல்லை. வஸ்துவாயுள்ளது வேறுபாடின்றி ஒரேமுகமாக எஞ்சியிருக்கும் அதைப்போன்று புத்தியானது நாசமடைந்தவுடன் பிரதிபிம்பமின்றி எவன் பொலிந்திடுவானோ, திறமை மிகுந்த சித்தமாயுள்ளது எதுவோ, அந்த ஆத்மாவே நான்.

அத்தமே யில்லை யாகி லம்முகா பாச மின்று
வத்துவா யுற்ற தேக வதனமே விகற்ப மின்றி
புத்தியற் றிடவே யாவன் பொலிவனு பாச மின்றி
யத்திற நித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 6

7. மனம், கண் முதலானவற்றோடு கலந்து ஒன்றுபடாதிருப்பவன்; மனம், கண் முதலானவற்றுக்கு மனம், கண் ஆவான். மனம், கண் முதலானவற்றினால் கலந்து தழுவிட முடியாதவன் எவனோ அவன் அழிவற்றவனும் எப்போதும் சித்தமாயுள்ளவனுமான ஆத்மா ஆவான். அவனே நான். அந்த ஆத்மாவே நான்.

மனச்சட்சு வாதி யோடு மருவிடா திருப்பன் யாவன்
மனச்சட்சு வாதி கட்கு மனச்சட்சு வாதி யாவன்
மனச்சட்சு வாதி யாலே மருவிடப் படாதான் யாவ
னனித்தமி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 7

8. பானையில் வைக்கப்பட்ட நீரில் பிரதிபிம்பம் காணப்பட்டாலும் சூரியன் ஒருவனேயாதலால் போல, உடலிலுள்ள உள்ளங்கள்தோறும் பல ஜீவர்களாக பிரகாசித்தாலும் எவன் ஒருவனாகவே சைதன்ய சொரூபனால் விளங்குகிறானோ அவன் அடையப்படாது சித்தமாய் உள்ளவன் ஆவான். அந்த ஆத்மாவே நான்.

கடசலந் தோறுந் தோன்றுங் கதிரவ னொருவ னேபோ
லுடலுறு முள்ளந் தோறு மொளிரினு நானு வாகச்
சுடருவ னொருவன் றானே சுத்தசே தனனு யாவ
னடைதலி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 8

9. ஒளிமயமான ஒரே சூரியன் எல்லோருடைய கண்களுக்கும் ஒரேகாலத்தில் உலகத்தைப் பிரகாசிக்கச் செய்வதைப்போல யாவரது புத்திக்குள்ளும் ஒளியாய் இருந்து உலகத்தைப் பிரகாசப்படுத்தும் ஒரே ஞான வடிவாயுள்ளவன் எவனோ, எல்லையற்ற நித்ய பரோட்சமாயுள்ள அந்த ஆத்மாவே நான்.

ஒளியதா மனேகங் கண்கட் கொருரவி யொருகா லத்தே
யொளிசெயு முலகத் தைப்போ லொருஞான வுருவன் யாவ
னொளியதா யனேகம் புத்திக் கொளிர்ப்பனிவ் வுலகந் தன்னை
யளவிலா நித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 9

10. சூரியனால் ஒளிர்விக்கப்படும் கண்களினால் எதிரேயுள்ள உருவங்களைப் பார்க்க முடியும். சூரியனால் ஒளிர்விக்கப்படாத கண்களினால் அவ்வாறு காண இயலாது. அந்த சூரியனும் யாருடைய ஒளியால், தானும் பிரகாசித்து கண்களையும் பிரகாசிக்கச் செய்கின்றானோ அந்த உருவற்ற என்றும் சித்தமாயுள்ள ஆத்மாவே நான்.

இரவியா லொளிருங் கண்ணே யெதிருறு முருவம் பற்று
மிரவியா லொளிரா தின்று மிதுபோலவ் விரவி தானு
மொருவனு ரொளியி னுலே யொளிர்ப்பனே நேத்தி ராதி
யருவனுய் நித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 10

11. அலையும் நீரில் ஒரே சூரியன் பல சூரியர்களைப் போலத் தோன்றுவான். சலனமற்ற நீரில் அவனே ஒரே சூரியனாகத் தோன்றுவான். அதுபோல சலிக்கும் தன்மையுள்ள புத்திகளிடத்தில் பலவாகத் தோன்றினாலும் ஒருவனாக உள்ளவன் எவனோ அந்த சலனமற்ற நித்ய சித்தமான ஆத்மாவே நான்.

சலசலத் தனேகன் போலச் சாருவ னேக பானு
சலனமில் சலத்திற் றானே சாருவ னேக னுக
சலமதி யனேகன் போலச் சாரினு மேகன் யாவ
னலைதலி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 11

12. விழிகளின் குறுக்கே மேகங்கள் வந்து மூடியபோது சூரியன் மூடப்பட்டு, அதனால் சூரியன் ஒளியிழந்து விட்டதாக மூடன் நினைப்பதுபோல அறியாமை என்னும் பார்வையினாலே ஆத்மாவானது பந்தத்தினால் கட்டப்பட்ட ஜீவனைப் போலத் தோன்றினாலும் அசைவில்லா நித்யாபரோட்சமாயுள்ள அந்த ஆத்மாவே நான்.

மூடன்றன் விழியி னைக்கார் மூடிட வதால ருக்கன்
மூடுபட் டொளியற் றானு முன்னுதல் போல யாவன்
மூடனின் பார்வை யாலே முற்றுமே பெத்தன் போல்வ
னுடலி னித்த சித்த னுயுள வவ்வான் மாநான். 12

13. எல்லா பொருட்களிடத்தும் தொடர்ந்து ஏக சொரூபமாக வியாபித்திருந்தும் அவற்றோடு கூடாதிருப்பவன் எவனோ ஆகாயத்தைப் போன்று எப்போதும் பரிசுத்தமாய், உள்ளவன் எவனோ, அகங்காரமற்ற நித்யா பரோட்சமாயுள்ள அந்த ஆத்மாவே நான்.

அகிலவத் துக்க டம்மி லனுசூத னேக ஞகி
யகிலவத் துக்க டம்மி லசங்கனு யிருப்பன் யாவன்
ககனநேர் நித்த சுத்த களங்கமி லுருவன் யாவ
னகமிலா நித்த சித்த ஞயுள வவ்வான் மாநான். 13

14. பலவித வஸ்துக்களின் சேர்க்கையினாலே ஸ்படிகமானது தனக்கெதிரே வைக்கும் பொருளின் பலவித நிறங்களாகக் காட்சியளிப்பது போல பலவாறான புத்திகளின் சேர்க்கையினாலே உனக்கும் பலவித பேதங்கள் உண்டாகின்றன. ஜலத்தில் தோன்றும் அசைவுகளை அதில் பிரதிபலித்த சந்திரனின் ஆட்டமாகக் கொள்ளுவது போல உனக்கும், பேதபுத்தியின் சேர்க்கையினாலே சஞ்சலமானது உன்மீதும் படர்ந்துள்ளது.

பலவித வுபாதி யாலே பலவிதம் படிகந் தோன்றும்
பலவித புத்தி யாலே பலவித முனக்கு மாகுஞ்
சலமதி னிலவி ஞட்டஞ் சான்ருகப் பூன்ற னேயச்
சலமுறு புத்தி யாலே சஞ்சல நினக்கு மாமே. 14

15. உள்ளங்கை நெல்லிக்கனி போல சுலபமாக ஆத்மாவைக் காட்டுவதினால் இது, ‘அஸ்தாமலக தோத்திரம்’ என்னும் பெயர் பெற்றது. அந்த பாலகனும் அஸ்தாமலகன் என பெயர் பெற்றான். அந்த மெய்ஞ்ஞான அறிவினில் தேர்ச்சியுற்ற பெரிய பாலகன் அனைவராலும் வியந்து புகழப்பட்டான்.

அத்தத்தி னெல்லி போல வான்மாவைக் காட்ட லாலீ
தத்தா மலகத் தோத்ர மாகும்பேர் பெற்ற தன்றி
யத்தா மலக னென்றவ் வறிவினிற் பெரிய பால
னித்தரை யாவ ராலு மேத்திடப் பட்டா னம்மா. 15